# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC. No. 78/2024 L.W.6 P.W.5**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.வரதராஜன் | Father / Husband Name | ஆறுமுகம் |
| Village | ஆவினங்குடி | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 59 |
| | | Time | 2.55 |

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 19.09.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் ஆவினங்குடியில் குடும்பத்துடன் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். எனக்கு அசா.1 முதல் அசா.4, பட்டியல் சாட்சிகள் மற்றும் எதிரி அழகுதுரையை தெரியும் ( எதிரி ஆஜரில்லை). கடந்த 25–05–2024 அன்று நான் திட்டக்குடி செல்வதற்காக ஆவிணங்குடி பேருந்து நிறுத்தத்திற்கு பகல் 12.00 மணிக்கு வந்தேன் அப்போது ஒரு காவல் ஆய்வாளர் காவல் பணிக்கு ஆய்வ செய்துகொண்டிருந்தார். அப்போது அந்த இடத்தில் அழகுதுரை என்பவரை அழைத்து விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். அந்த விசாரணையில் ஏதோ செல் திருடுபோயிடுச்சினு விசாரித்திருந்தார்கள் அப்போது அந்த விசாரணையின்போது நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த தமிழ்செல்வன் என்பவரும் அந்த பேருந்து நிறுத்தம் அருகில் விசாரிக்கும்போது நின்றுகொண்டிருந்தோம் அந்த அழகுதுரையை ஆய்வாளர் ஒரு அம்மா விசாரணை செய்து அழகுதுரை என்பவர் செல்லை நான்தான் எடுத்துக்கொண்டேன் என்று ஒத்துக்கொண்டார் அப்போது அங்கு இருந்த ஆய்வாளர் இரண்டு பேப்பரில் மூன்று, நான்கு பக்கம் எழுதி அவரிடம் கையெழுத்து வாங்கினார். அதுக்கு அப்புறம் நாங்கள் அங்கு பாத்துகிட்டு இருந்ததால அந்த அடிப்படையில் எங்களிடம் இந்த விபரம் உங்களுக்கு தெரியும் என்றும், எங்களை சாட்சியாக இருக்க சொல்லியும் கையெழுத்து கேட்டார்கள் முதலில் நான் அதில் கையொப்பம் போட்டேன். இரண்டாவது என்னுடன் வந்த தமிழ்செல்வன் என்பவரும் கையெழுத்து போட்டார். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான் அந்த கையொப்பம் **அசா.ஆ.2** ஆகும். போலிஸார் என்னை அந்த இடத்தில் வைத்து விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விருத்தாசலத்திலிருந்து திட்டக்குடி செல்வதற்கு அரசு பேருந்துகளும், தனியார் வண்டிகளும் உள்ளது என்றால் ? சரிதான். நான் **அசா.ஆ.2** கையொப்பம்போடும்போது எத்தனை மணியிருக்கும் என்றால் ? பகல் 12.00 மணியிருக்கும். என்னை போலிஸார் விசாரிக்கும்போது எத்தனை மணியிருக்கும் என்றால் ? 12.05 லிருந்து 12.15 மணியிருக்கலாம். விசாரணைக்கு பிறகு உடனே நான் திட்டக்குடிக்கு சென்றுவிட்டேனா என்றால் ? இல்லை ஒருஅரை மணிநேரத்திற்கு பிறகு டீ சாப்பிட்டுவிட்டு புறப்பட்டுவிட்டேன். **அசா.ஆ.2** ஐ நான் படித்து பார்த்தேனா என்றால் ? என்னிடம் படித்து காண்பித்தார்கள் பிறகுநான் கையொப்பம்போட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலிஸார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் ? என்னை விசாரிக்கவில்லை அந்த பையனை தான்( அழகுதுரையை) விசாரித்தார்கள். பொதுவாக ஆவினங்குடி பேருந்து நிறுத்தத்தில் கூட்டமாக இருக்கும் என்றால் ? ஆமாம். என்னை போலிஸார் விசாரிக்கும்போது அங்கு எத்தனை நபர்கள்வரை இருந்திருப்பார்கள் என்றால் ? மதியம் நேரம் என்பதால் ஆட்கள்குறைவாகத்தான் இருந்தார்கள். 10 முதல் 15 நபர்கள் வரை இருந்திருப்பார்கள். அசா.1 மற்றும் அசா.2 என்னுடைய உறவினர்களா என்றால் ? ஊர்க்காரர்கள். அசா.1 மற்றும் அசா.2 என்னுடைய ஊர்க்காரர்கள் என்பதால் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் **அ.சா.ஆ.2** கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்துதான்போட்டேன் என்றால் ? சரியல்ல.

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC. No. 78/2024 L.W.5 P.W.4**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.பாத்திமா | Father / Husband Name | மாணிக்கம் |
| Village | ஆவினங்குடி | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 60 |
| | | Time | 2.40 |

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 19.09.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

எதிரி ஆஜரில்லை. **எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் ஆவினங்குடியில் குடும்பத்துடன் வசித்து புவனகிரியில் உள்ள அங்கன் வாடியில் முதல் நிலை மேற்பார்வையாளராக பணிபுரிந்து பணிஓய்வுபெற்று மேற்ச்சொன்ன முகவரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு அசா.1 முதல் அசா.3, பட்டியல் சாட்சிகள் மற்றும் எதிரியை தெரியும்அவரும் இதே ஊரைச்சேர்ந்வர் ( எதிரி ஆஜரில்லை). கடந்த25–05–2024 ம் தேதி இரவு 1.00 மணியளவில் ராஜேந்திரனின் மகன்அழகுதுரை என்பவர் விமலா வீட்டிற்கு வந்து டி.வி மேலே உள்ள செல்லை எடுத்துக்கொண்டு, விமலா கழுத்தில் இருந்த நகையை திருட ஆரம்பித்தான் உடனே விமலா திருடன் திருடன் என சத்தம்போட்டு பிரகாஷ்மும், விமலா இருவரும் அழகுதுரையை துரத்திக்கொண்டே வந்தனர். அதற்கு முன்னாடி விருத்தம்மாள் என்பவர் இந்த நடந்த பிரச்சனையை பார்ப்பதற்கு மாரியம்மன் கோவில்முன்னாடி நின்றுகொண்டிருந்தார். இப்பதான் என் வீட்டிற்கு நகையை பறிக்க வந்தான் உன் வீட்டிற்கும் நகையை பறிக்க வந்துட்டானா என்றுவிருத்தாம்பாள் விமலாவிடமும், பிரகாஷிடமும் சொன்னார். உடனே விமலாவும், பிரகாஷீம் காவல் நிலையத்தில் புகார்செய்தார்கள். போலிஸாா் நேரடியாக வந்து விசாரித்தனர் என்னையும் விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால்? விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னை எங்கு, எப்போது விசாரித்தார்கள் என்றால்? 25 ம்தேதி மதியம் 12.00 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். முதலில் என்னை சம்பவ இடத்திலவைத்து விசாரித்துவிட்டு பிறகு காவல் நிலையம், வரச்சொன்னதின் பேரில் அங்கு

சென்றேன் அங்கும் விசாரித்தார்கள். என்னுடைய வீடு அ.சா.1, அசா.2 ன் வீட்டின் அருகில் இல்லை என்றால் ? சரியல்ல பக்கத்தில்தான் என்னுடைய வீடு உள்ளது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் போலிஸாரின் விசாரணையிலும்சொன்னேன் என்றால் ? சரிதான். போலிஸாரின் விசாரணையின்போது சம்பவத்தை நான் கேள்விப்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் ? இல்லை நான் நேரில்பார்த்தேன். நான்சொல்வது போன்று சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், செல்போன்எதுவும் திருடுபோகவில்லை என்றாலும், அசா.1 எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம்அளிக்கிறேன் என்றால் ?சரியல்ல.

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI